செய்தி வெளியீடு எண்:461 நாள்: 17.07.2017

## சென்னை கிரீன்வேஸ் சாலையில் , அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் ரூ. 17.50 கோடி மதிப்பில் நவீன வசதிகளுடன் திருமண மண்டபம் கட்டும் பணி இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் ஆய்வு

சென்னை கிரீன்வேஸ் சாலையில் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமாக 106594 சதுர அடி பரப்பளவில் ரூ. 17.50 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் நவீன வசதிகளுடன் கூடிய திருமண மண்டப கட்டுமானப் பணிகளை இன்று (17.07.2017) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் அலுவலர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது அமைச்சர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த போது தெரிவித்ததாவது:

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு சாதாரண மக்களும் பயன்பெறும் வகையில் இந்து சமய அறநிலையத்துறை சார்பாக திருக்கோயில்களுக்கு சொந்தமான இடங்களில் திருமண மண்டபங்கள் நவீன வசதிகளுடன் கட்ட திட்டமிடப்பட்டு பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. அருள்மிகு கபாலீஸ்சுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான கிரீன்வேஸ் சாலையில் ரூ. 9.20 கோடி மதிப்பில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்ட நிலையில், தற்பொழுது கூடுதல் வசதிகளுக்காக இறுதி மதிப்பீட்டுத் தொகையாக ரூ. 17.50 கோடி மதிப்பில் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இம்மண்டபத்தில் 1000 நபர்கள் அமரக்கூடிய வகையிலும், 555 நபர்கள் ஒரே நேரத்தில் உணவு அருந்தக் கூடிய வகையிலும் கட்டப்பட்டு வருகிறது. மண்டபத்தில் நவீன வசதிகளுடன் தங்கும் அறைகள், சமையல் கூடம் மற்றும் கழிவறை வசதிகளும், மின்தூக்கி வசதியுடன் அமைக்கப்பட்டு வருகின்றன. திருமண மண்டப வளாகத்தில் 63 வாகனங்கள் நிறுத்துமிட வசதிகளும், இரண்டு சக்கர வாகனங்கள் 63 எண்ணிக்கையில் நிறுத்தும் வகையிலும் வசதிகள் அமைக்கப்பட உள்ளன. இதுவரையில் 95 சதவிகித கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. இன்னும் மூன்று மாதங்களில் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு திறக்கப்பட உள்ளது.

இதேபோல் அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் திருக்கோயில் அருகிலேயே ரூ. 12. 77 கோடி மதிப்பில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்ட நிலையில், தற்பொழுது கூடுதல் வசதிகளுக்காக இறுதி மதிப்பீட்டுத் தொகையாக ரூ. 20.10 கோடி மதிப்பில் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இம்மண்டபத்தில் 1400 நபர்கள் அமரக்கூடிய வகையிலும், 700 நபர்கள் ஒரே நேரத்தில் உணவு அருந்தக் கூடிய வகையிலும் கட்டப்பட்டு வருகிறது. மண்டபத்தில் நவீன வசதிகளுடன் 14 அறைகளும், சமையல் கூடம் மற்றும் கழிவறை வசதிகளும், மின்தூக்கி வசதியுடன் அமைக்கப்பட்டு

வருகின்றன. திருமண மண்டப வளாகத்தில் 200 வாகனங்கள் நிறுத்துமிட வசதிகளும், இரண்டு சக்கர வாகனங்கள் 500 எண்ணிக்கையில் நிறுத்தும் வகையிலும் வசதிகள் அமைக்கப்பட உள்ளன. இதுவரையில் 85 சதவிகித கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன என்று ஆய்வின் போது அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் முனைவர் மா. வீரசண்முகமணி, கண்காணிப்புப் பொறியாளர் திருமதி.கார்த்திகாயினி, செயற்பொறியாளர் திரு.பி.ஆர்.ஜே.சூர்யபிரகாஸ், இணைஆணையர்கள் திரு.லட்சுமணன், உதவிஆணையர் பா.விஜயா மற்றும் அலுவலர்கள் உடனிருந்தார்கள்.

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**